**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093884

1. District மாவட்டம் : திருச்சி   PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு   Year: ஆண்டு 2019   FIR No.: மு.த.அ. எண் 07   Date: நாள் 19.06.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018   Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 18.06.19   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் 11.00hrs   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2019   Time : நேரம் 11.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : 12 KMS வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி : திருவானைக்கோவில் உதவி பொறியாளர் அலுவலகம், ஸ்ரீரங்கம் மின்வாரிய அலுவலக வளாகம், ஸ்ரீரங்கம், திருச்சி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -   District : -
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : M. கல்யாணி   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : முத்துக்குமரன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 24.05.1979   (d) Nationality : நாட்டினம் : இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்   (g) Address : முகவரி : சென்னை, அம்மா மண்டப [illegible], 6வது தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. தியாகராஜன், திருவானைக்கோவில் உதவி பொறியாளர், ஸ்ரீரங்கம் மின்வாரிய அலுவலக வளாகம், ஸ்ரீரங்கம், திருச்சி.
   2) திரு. [illegible] மின்வாரிய உதவியாளர் திருவானைக்கோவில் உதவிபொறியாளர் ஸ்ரீரங்கம் மின்வாரிய அலுவலக வளாகம், திருச்சி,

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - தாமதம் இல்லை -

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

*கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.*

*திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 19.06.2019 முற்பகல் 11.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி, ஸ்ரீரங்கம், அம்மா மண்டபம் விஸ்தரிப்பு, 6வது தெரு, எண்.2-இல் வசித்து வரும் முத்துகுமார் என்பவர் மனைவி திருமதி.கல்யாணி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, ஸ்ரீரங்கம் டி.என்.இ.பி. வளாகத்தில் உள்ள திருவானைக்கோவில் ஏ.இ. திரு.தியாகராஜன் மற்றும் மின்வாரிய ஊழியர் தமிழ்மணி மற்றும் புகார்தாரர் திருமதி.கல்யாணி ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 19.06.2019 மதியம் 13.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.7/2019 சட்டப்பிரிவு 7 (a)ஊழல் தடுப்பு (Amendment) சட்டம் 2018-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 19-6-2019 அனுப்புதல் M.கல்யாணி, க/பெ முத்துக்குமார்,*

**(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] 19/6/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
M. Kalyani [signature] 19.6.19.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.06.2019
1600 hrs

Name: பெயர் M. நவநீத கிருஷ்ணன்
Rank: நிலை ஆய்வாளர் No. எண் ……….
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருச்சி.

<u>திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.07/2019ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......</u>

2, அம்மா மண்டபம் விஸ்தரிப்பு, 6வது தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி. பெறுதல் லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரி, திருச்சி. அய்யா, நான் திருச்சி, ஸ்ரீரங்கம், அம்மா மண்டபம் விஸ்தரிப்பில் குடும்பத்துடன் வசிக்கிறேன். எனக்கு சொந்தமான திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம் வெள்ளிதிருமுத்தம் சிராம சர்வே எண்.2371/6-இல், 2400 சதுரடி கொண்ட காலி மனையில் என் பெயரில் 1800 சதுரடி பரப்பளவுக்கு திருச்சி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டத்தில் கட்டிட அனுமதி பெற்று, அடித்தளம், தரைத்தளம் பணிகள் முடித்து, தரைத்தளத்தின் ஒரு பகுதிக்கு ஏற்கனவே மின் இணைப்பு பெற்றேன். மேலும், முதல் தள பணிகளுக்காக தற்காலிக மின் இணைப்பு பெற்று, முதல் தளப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அடித்தளம் மற்றும் தரைத்தளத்தின் ஒரு பகுதியை கமர்ஷியல் பயன்பாட்டிற்காக பயன்படுத்த, அடித்தளம் மற்றும் தரைத்தளத்திற்கு கமர்ஷியல் மின் இணைப்பு இரண்டு கேட்டு கடந்த 03.06.2019ஆம் தேதி திருச்சி, ஸ்ரீரங்கம் டி.என்.இ.பி அலுவலகத்தில் மின்இணைப்பு பெற, விண்ணப்பம் பெற்று, விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அது தொடர்பான ஆவணங்களை அதனுடன் இணைத்து ஸ்ரீரங்கம் டி.என்.இ.பி வளாகத்தில் உள்ள திருவானைக்கோவில் உதவி பொறியாளர் அலுவலகத்தில் கொடுத்தேன். உடனே, அந்த அலுவலகத்தில் உள்ள ஊழியர் என்னுடைய ஆவணங்களை பார்த்துவிட்டு, மேற்படி கட்டிடத்திற்கு மின் இணைப்பு பெற தள ஆய்வு செய்ய திருவானைக்கோவில் உதவி பொறியாளர் உங்களுடைய கட்டிடத்திற்கு வருவார், அதன்பின்புதான் நீங்கள் கட்டணம் செலுத்தமுடியும் என்று சொன்னார். கடந்த 04.06.2019 ஆம் தேதி நான் என்னுடைய கட்டிடத்தில் இருந்தபோது, திருவானைக்கோவில் உதவி பொறியாளர் திரு.தியாகராஜன் எனது கட்டிடத்திற்கு வந்து தன்னை அறிமுகம் செய்துகொண்டு, தள ஆய்வு செய்து, ஆவணங்களை பார்த்துவிட்டு, உங்கள் கட்டிடத்தை மீண்டும் ஒரு முறை தள ஆய்வு செய்யவேண்டும் என்று தெரிவித்துவிட்டு சென்றுவிட்டார். அதன்படி 17.06.2019 ஆம் தேதி மதியம் 2 மணியளவில் திருவானைக்கோவில் உதவி பொறியாளர் திரு.தியாகராஜன் எனது கட்டிடத்திற்கு வந்து மீண்டும் தள ஆய்வு செய்துவிட்டு, என்னை நாளை தனது அலுவலகத்திற்கு வரும்படி சொல்லி, உங்களிடம் மத்த விசயம் பேசவேண்டும் என்று தெரிவித்துவிட்டு சென்றுவிட்டார். அதன்படி நான், நேற்று 18.06.2019 ஆம் தேதி காலை சுமார் 11 மணியளவில் ஸ்ரீரங்கம் டி.என்.ஈ.பி. அலுவலகத்திற்கு சென்று, திருவானைக்கோவில் உதவி பொறியாளர் திரு.தியாகராஜனை அவரது இருக்கையில் சந்தித்தபோது, அவரது அருகில் மின்வாரிய ஊழியர் திரு.தமிழ்மணி என்பவரும் நின்றுகொண்டிருந்தார். உதவி பொறியாளர் திரு.தியாகராஜன் என்னிடம் இரண்டு கமர்ஷியல் கனெக்ஷனுக்கும் ரூ.17,000/- கவர்மெண்ட் பீஸ் கட்டிட்டு வாங்க மத்தத அப்புறம் பேசிக்கலாம் என்று என்னிடம்

தெரிவித்தார். அதன்படி நான், ரூ.17,000/- பணத்தை எடுத்து, கணிணி கவுண்டரில் உள்ள அலுவலரிடம் கொடுத்தேன். அவர் ரூ.6259/- மற்றும் ரூ.6259/- என இரண்டு பில்கள் கொடுத்துவிட்டு, நீங்க உதவி பொறியாளரை சந்தித்து, விபரம் கேட்டுக்கங்க என்று தெரிவித்தார். நான் ஏ.இ. திரு.தியாகராஜனை சந்தித்து, ரூ.6259/- வீதம் இரண்டு பில்கள்தான் கொடுத்தார் என்று அவரிடம் தெரிவித்தேன். அதற்கு ஏ.இ. மீதி பணத்திற்கு மீட்டர் வைக்கும்போது பில் தருவார்கள் என்று தெரிவித்தார். அதன் பிறகு ஏ.இ. திரு.தியாகராஜன் என்னிடம் பொதுவாக கமர்ஷியல் கனெக்சனுக்கு பில்லே கொடுக்கமாட்டோம், உங்க கணவர் கேட்டதாக சொன்னதால் கொடுத்தோம். பீஸ் பணம் கட்டினா மட்டும் கனெக்ஷன் கிடைச்சுருமா, என்ன தனியா கவனிக்கனும் என்று சொன்னார். ஏ.இ. அருகில் நின்றுகொண்டிருந்த மின்வாரிய ஊழியர் தமிழ்மணி என்னிடம், எங்களுக்கு தனியாக வரவேண்டியது வராம பில்லே கொடுக்கமாட்டோம் என்று சொன்னார். அதற்கு நான், என்ன சார் தனியாக கவனிக்கனும் என்று ஏ.இ. திரு.தியாகராஜனிடம் கேட்டேன். அதற்கு ஏ.இ. அருகில் நின்று கொண்டிருந்த மின்வாரிய ஊழியர் திரு.தமிழ்மணி, என்னிடம் பொதுவா கமர்ஷியல் கனெக்சனுக்கு பீஸ் இல்லாம தனியா 7,500/- வாங்குவோம் என்று சொன்னார். அதற்கு நான் ஏ.இ.யிடம் சார் பில்டிங்கே லோன் போட்டு கட்டுறேன், பிள்ளைங்க மேற்படிப்புக்காக பணம் நிறைய செலவு செஞ்சுட்டேன், பணம் இல்லாம் செஞ்சிகொடுங்கசார் என்று கேட்டேன். அதற்கு ஏ.இ. திரு.தியாகராஜன் என்னிடம் நாங்க கேட்ட பணத்தை கொடுத்தீங்னா வேலை நடக்கும், இல்லாட்டி கனெக்ஷன் கிடைக்காது என்று சொல்லிவிட்டு, நீங்க வேண்ணா இரண்டு கனெக்ஷனுக்கும் சேர்த்து ரௌண்டா மொத்தம் ரூ.10,000/- கொடுத்திடுங்க என்று என்னிடம் சொன்னார். அதற்கு மின்வாரிய ஊழியர் தமிழ்மணி ஏ.இ. சார் உங்களுக்காக குறைச்சு சொல்லிட்டாரு, நீங்க அந்தப்பணத்தை கொடுத்து வேலைய முடிச்சிட்டு போங்க மேடம் என்று சொன்னார், லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இருந்தாலும் அப்போதைக்கு நான் அவர்களிடம் பணத்தை ரெடிபண்ணிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட ஸ்ரீரங்கத்தில் டி.என்.இ.பி. வளாகத்தில் உள்ள திருவானைக்கோவில் ஏ.இ. தியாகராஜன் மற்றும் மின்வாரிய ஊழியர் தமிழ்மணி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (M.Kalyani) 19.6.19. Submitted to the Court of Hon'ble Special Judge for the Prevention of Corruption Act 1988 cases, Trichy:-. Received this report today (19.06.2019) at 11.30 hrs. made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.7/2019 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 13.30 hrs on 19.06.2019. Sd.xxx (M.Navaneetha Krishnan) 19.06.2019 Inspector of Police, V&AC, Trichy.

M. [signature] 19/6/19
Insp., V&AC
Trichy.